செய்தி வெளியீடு எண் : 1421 நாள்:24.12.2021

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில் நடைபெற்ற "நிதிநுட்ப ஆட்சிமன்ற குழுவின் முதல் கூட்டம்"**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில் நிதிநுட்ப துறையில் மேற்கொள்ளப்படும் முன்முயற்சிகள் மற்றும் நிதிநுட்ப கொள்கையை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றத்தினை கண்காணிக்க அமைக்கப்பட்ட நிதிநுட்ப ஆட்சிமன்ற குழுவின் (FinTech Governing Council) முதல் கூட்டம் தலைமைச் செயலகத்தில் இன்று (24.12.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நிதிநுட்ப துறையில் தமிழ்நாட்டினை முன்னணி மாநிலமாக்குவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அத்துறை சார்ந்த வல்லுநர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. நிதிநுட்ப துறையில் செயல்திறன் மற்றும் திறன் மேம்பாடு, தொடக்கநிலைத் தொழில் முனைவோருக்கான சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல் மற்றும் இணையவழி பண பரிவர்த்தனைகளை மேற்கொள்ள பயனாளிகளை ஊக்குவித்தல் போன்றவற்றிற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டன. மேலும், நிதிநுட்ப கொள்கையின் அடிப்படையில் நிதி உதவி கோரும் மனுக்களை பரிசீலிக்கவும், நிதிநுட்ப நிறுவனங்களுக்கு நிதிச்சலுகை அளிக்கவும் நிதிநுட்ப ஒப்புதல் அமைப்பு (FinTech Sanctioning Authority) ஏற்படுத்துவது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், இக்குழுவின் துணைத் தலைவர் தலைமைச் செயலாளர் முனைவர்.வெ.இறையன்பு, இ.ஆ.ப., அரசுத் துறை உறுப்பினர்களான தொழில் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., நிதித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு.என்.முருகானந்தம், இ.ஆ.ப., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் செயலாளர் திரு.வி.அருண் ராய், இ.ஆ.ப., வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்/ தலைமைச்

செயல் அலுவலர் திருமதி. பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.அஜய் யாதவ், இ.ஆ.ப., ஃபின்ப்ளு நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் / சென்னையில் உள்ள இந்திய தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவின் இயக்குநர், டாக்டர். சஞ்சய் தியாகி மற்றும் நிதிநுட்பத் துறை வல்லுநர்களாக உள்ள உறுப்பினர்கள் சிட்டி சௌத் ஏசியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.பாலாஜி நுத்தலபாடி, முன்னணி வால் ஸ்டீரீட் இண்வெஸ்ட்மெண்ட் பேங்கிங் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் இயக்குநர், திரு.சுந்தர் கண்ணன், காக்னிஸன்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராம்குமார் ராமமூர்த்தி மற்றும் சிறப்பு அழைப்பாளர் டி வி எஸ் கேபிடல் ஃபண்ட்ஸ் நிறுவனத்தின் மூத்த ஆலோசகர் திரு.கே.மணி ஆகியோர் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**